கார்ப்பரேஷனிடம் திட்டம் இருக்கிறதா? தனி நபர்கள் ஓட்டல் கட்ட முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனி நபர்கள் சுற்றுலா விடுதிகள், ஓட்டல்கள் கட்ட முன்வந்தால் தமிழ்நாடு "இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன்" உதவி கொடுத்து வருகிறது. இப்போது இருக்கிற சுற்றுலா கார்ப்பரேஷன் எல்லா மாவட்டங்களிலும் எந்தெந்த இடங்களில் விடுதிகளை அமைக்கலாம், ஓட்டலை அமைக்கலாம் என்ற பரிசீலனையில் ஈடுபட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி முடிந்தால் தூத்துக்குடியும் பயன் பெறும்.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : சாத்தனூர் அணையைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அங்கு இப்பேர்ப்பட்ட விடுதிகளைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாவட்டங்கள்தோறும் இந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு சாத்தனூர் பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : அதே கேள்வி—கல்லணையில் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கல்லணைக்கும் அதே பதில் தான்.

Air service for tourists

* 138 Q.—Thiru N.K. PALANISWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether this Government has represented to the Centre to give permission to import small planes for the inter-district travels of the tourists; and

(*b*) if so, whether any reply has been received therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நம்முடைய நாட்டின் தென்கோடியில் இருக்கும் கன்னியாகுமரிக்கு பிரதமரும், குடியரசுத் தலைவரும், மற்றவர்களும் வருகிறார்கள். அங்கு ஹெலிகாப்டரைப் பயன்படுத்து

1972 டிசம்பர் 12]

கிறார்கள். ஆகவே, மதுரைக்கும் கன்னியாகுமரிக்கும், திருவனந்தபுரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் இப்படி ஒரு சிறு விமான சர்விஸைத் தொடங்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப்பட்ட ஆலோசனை இல்லையென்று சொன்னாலும் உலகம் வளர்ந்து வருகின்ற நிலைமையைப் பார்க்கும்போது அப்படிப்பட்ட விமானங்கள் விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. சமீபத்தில் பிரிட்டனில் சிறு விமானங்களை உற்பத்தி செய்கிறார்கள். பதினைந்து மைல் போகக் கூடியவை, விலைகூட அதிகம் இல்லை. 80,000 ரூபாய் (250 பவுண்டு) என்று சொல்லுகிறார்கள். அதெல்லாம் தயாரான பிறகு திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கும், மதுரையிலிருந்து கன்னியாகுமரிக்கும், சிறு விமானங்களை விடுவதோடு கயத்தாற்றிலும் ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்து முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தில் சிலபல நாட்களாக ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தினை இங்கே சட்டமன்றத்தில் பணியாற்றி வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் சென்று நேரடியாகப் பார்ப்பதற்கு பஸ் வசதியோ அல்லது ரயில் வசதியோ இல்லாது துண்டிக்கப்பட்டு விட்ட காரணத்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சிறு விமானம் மூலம் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி அந்த இடங்களைப் பார்த்து வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது சுற்றுலா சம்பந்தப்பட்ட கேள்வி. சட்டமன்ற உறுப்பினர்களைச் சுற்றுலா அனுப்பத் தயாராக இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகள் நீலமலைக்குச் செல்வதற்காக, கோவையிலிருந்து உதகைக்கு ஒரு ஹெலிகாப்டர் வசதி செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட எண்ணம் தற்போது அரசிடம் இல்லை.